# பள்ளிக் கூட மைனாக்கள்



ஆரிசன்

# பள்ளிக்கூட

## மைனாக்கள்

(சிறார் பாடல்கள்)

**ஆரிசன்**

ஆசா பதிப்பகம்
aasaa publishers

**ஆசா பதிப்பகம்**

1126 / 2, எம்.ஜி.ஆர்.நகர்
கீழ்க்கொடுங்காலூர் அஞ்சல்
வந்தவாசி வட்டம் – 604 403
திருவண்ணாமலை மாவட்டம்
94423 11118.

**பள்ளிக்கூட மைனாக்கள் (சிறார் பாடல்கள்)**

☐ ஆசிரியர் : **ஆரிசன்**

☐ உரிமை : © ஆசிரியருக்கு

☐ பொருண்மை : கவிதை ☐ அளவு : டெம்மி

☐ முதல் பதிப்பு : திசம்பர் 2010, இரண்டாம் பதிப்பு : ஜூன் 2025

☐ பதிப்பு : **ஆசா பதிப்பகம்**
சாவித்திரி ஆரிமுத்து இல்லம்
1126 / 2, எம்.ஜி.ஆர்.நகர், கீழ்க்கொடுங்காலூர் அஞ்சல்,
வந்தவாசி வட்டம் – 604 403, திருவண்ணாமலை மாவட்டம்
94423 11118.

☐ ஒளி அச்சு : **ஜோதி பதிப்பகம்**
எண் : 2/1067, 11 ஆவது தெரு, 2 ஆவது குறுக்குத் தெரு,
முகப்பேர் மேற்கு, சென்னை – 600 037. கைபேசி : 9940190616

Pages : 92 Rs. : 100/-

**Pallikkooda Mainakkal (Sirar Padalgal)**

\# Author : **Arison**

\# Copy Right : © Author

\# Subject : Poetry # Book Size : D/S

\# First Edition : December 2010, Second Edition : June 2025

Publication : **Aasha Publication**
Savithiri Arimuthu Illam
1126 / 2, MGR Nagar, Keezhkkodungalur Post
Vanthavasi Taluk, Thiruvannamalai D.T.

Layout & Printing : **JOTHI PUBLICATIONS**
No. 2/1067, 11th Street, 2nd Cross Street
Mugappair West, Chennai - 600 037.

## சமர்ப்பணம்

---

நெல்லைச்சீமை, 21, சுடலை மாடன் வீதி
மூவெழுத்து வேந்தர் திறனாய்வறிஞர் குழந்தை மனசுக்காரர்
விமர்சனத் தவத்தோடு
விரைந்தும், தொடர்ந்தும் எழுதி வரும்
வாஞ்சை மிக்க தோழர் திகசி அவர்களுக்கு

# நன்றி...

கலைமாமணி கவிஞர் பொன்னடியார்

எழுத்தாளர் மேலாண்மை பொன்னுச்சாமி

பாவலர் மலர்மகன்

பாவலர் தமிழியலன்

டாக்டர் பூவண்ணன்

ஓவியக்கவி ஸ்ரீரசா

ஓவியச்செம்மல் இரா. அன்பழகன்

பா. உதயகண்ணன்

பூங்குயில் சிவகுமார்

புதுவை தமிழ்நெஞ்சன்

புதுவை சீனுதமிழ்மணி

பாவலர் சி. விநாயகமூர்த்தி

குழந்தை எழுத்தாளர் இரா. மனோன்மணி

ந. அமுதா ஆரிசன்

---

தினமணி – சிறுவர்மணி

தினத்தந்தி – சிறுவர் தங்கமலர்

கோகுலம்

தீக்கதிர் – வண்ணக்கதிர்

குட்டி

## வெற்றிநடை போட வாழ்த்துகிறேன்!

*தமிழகத்தின் இன்றைய தகுதி மிகு கவிஞர்களில் ஒருவர் கவிஞர் ஆரிசன். நாடு, மொழி, மக்கள்நலம் எண்ணி, உலகப் பார்வையோடும், மனித நேயப் பார்வையோடும் படைப்புகளைப் படைத்து வெற்றி நடை போடும் முற்றிய நல் நெற்றான கவிஞர் இவர்.*

*எல்லோரும் கவிஞராகலாம், படைப்பாளியாகலாம். ஆனால் பிறந்த மண்ணின் பெருமை காக்கவும், அம் மண்ணின் ஒடுக்கப்பட்ட பாட்டாளரின் மக்கள் உரம் பெறவும், உயர்வு பெறவும் பாடும் கவிஞனாக, படைப்பாளியாக வலம் வருபவர், வெற்றி பெறுபவர் இன்றும் சிலர் கணக்கில் தான் உள்ளனர். அந்தச் சிலரில் என் சிந்தைக்கினிய ஒரு கொள்கைக் கவிஞராக, தன் தகுதி மிகு படைப்புகளால் தலை நிமிர்ந்து நிற்பவர் கவிஞர் ஆரிசன். இதற்குச் சரியான சான்றுகளாக இதற்கு முன் வெளி வந்துள்ள கவிஞரின் நூல்கள் ஒளி முகங்காட்டுகின்றன.*

*இப்போது மலர் முகங் காட்டும் இக்குழந்தைப் பாடல்களின் தொகுப்பும் இவரின் படைப்புத் திறனைப் பறைசாற்றும் பாடத்தொகுப்பாக இளநகை புரிகின்றது.*

*நாடு முன்னேறிக் கொண்டிருக்கிறது. மக்கள் எல்லா நிலையிலும் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், மனிதப் பண்புகள் நாளுக்கு நாள் படி இறங்கிக் கொண்டிருக்கிறது.*

*அறிவியல் சார்ந்த பொருளாதார வெற்றிகள் சார்ந்த தன்னல வெறி சார்ந்த கல்விப் போக்கால் மனித சமூகம் நாளும்*

*முன்னேறினாலும் அதன் அடிப்படை மனிதப் பண்புகள் செல்லரிப்புகளுக்குள்ளாகிச் சிதைந்து கொண்டே இருக்கிறது. இதிலிருந்து அதை மீட்க ஒரே வழி இன்றை குழந்தைகளை, இளைஞர்களை அகம், புறம் சார்ந்த நன்னெறிகளைப் புகட்டி வளர்க்கும் போக்கிலும் நாம் முதல் நிலை கவனம் செலுத்த வேண்டும். அந்த நினைவுகளின் வழியில் இன்றைய சமூகச் சிந்தனையுள்ள முற்போக்குக் கொள்கைகளை ஏந்திய படைப்பாளர்கள் குழந்தை இலக்கியப் படைப்புகளைப் படைக்கும் போக்கிலும் தங்களை முன்னிறுத்திக் கொள்ள வேண்டும் என்பதை உணர்ந்தவராக, நன்குணர்ந்தவராக கவிஞர் ஆரிசன் பயணித்துள்ளார் என்பதற்கு இக் குழந்தைகள் பாடல்கள் நல்ல சான்றாக விளங்குகின்றது.*

*தமிழ்த்தாயின் இரு கண்களாக, நவீன இலக்கியத்தின் முன்னோடிகளாக, வழிகாட்டிகளாக நமக்கு என்றும் திகழ்பவர்கள் மகாகவி பாரதி - புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். எல்லா வழிகளிலும் தமிழ் இலக்கியத் துறையில் குறிப்பாக கவிதைத் துறையில் நல் வழிகாட்டிகளாக அவர்கள் குழந்தை இலக்கியப் படைப்புகள் படைத்தும் நமக்குப் பாதை அமைத்துக் கொடுத்துள்ளனர்.*

*அந்தப் பாதை வழி நடைபோடும் கவிஞர் ஆரிசன் குட்டிப் பயலுக்கு அறிவுரை சொல்லும் போது,*

*”கோட்டைக் கனவை நினைவில் ஏந்தி*

**வாழ்வை வெல்லடா!**
**சமூகத் தீமை உணர்ந்து நீயும்**
**கோபங் கொள்ளடா – நீ**
**சரித்திரம் படைக்க சாதி மதப் பேயை வெல்லடா**

*என்ற பா வரிகளால் பாதை காட்டுகிறார்.*

**‘கலாம் மாமா’ என்ற படைப்பில்**
**குழந்தை என்றால் பிரியம் என்று**
**பெயரெடுத்தவர்–**
**நேரு மாமா வாரிசாக அவர்**

**இன்றும் இருப்பவர்!**
**விஞ்ஞான அறிவையுமே**
**வளர்க்கச் சொல்லுவார்**
**மெய்ஞானக் கதைகளையும்**
**சொல்லி மகிழுவார்**
**எந்தமத வெறுப்புமின்றி**
**பழகச் சொல்லுவார் – அவர்**
**சொந்த மதம் தாண்டி மனிதக்கு**
**அன்பைக் காட்டுவார்!**

*என்று பாடும் வரிகளில் எப்படிப்பட்ட தலைவர்களை மதிக்க வேண்டும், எப்படிப்பட்ட கொள்கை வழி நடக்க வேண்டும் என்பதைத் தெளிவு படுத்துகிறார்- தெளிந்த வரிகளால்.*

*'காக்கைப் பாசப்' பாடலில்*

**"ஒன்று சேரும் உணர்வுமே**
**காகத்துக்கு இருக்குது – அது**
**வென்று காட்ட நமக்குமே**
**என்றும் பாடம் சொல்லுது!**
**"எங்களிடம் காட்டும் பாசம்**
**மக்களுக்குக் காட்டுங்கள் – நிற**
**பேதமின்றி உலகையுமே**
**மனித நேயம் ஆக்குங்கள்**

*என்று இப்படி இந்நூலின் அனைத்துப் படைப்புகளிலும் அவர் கொள்கைகளை இன்றைய குழந்தைகளுக்குத் தேவையான நல்வழிகளை தெள்ளத் தெளிவாக, எளிய, இனிய நடையின் படைப்புகளாக்கித் தந்து வெற்றி கண்டுள்ளார். முற்போக்கு திசைபோகும் இம் முன்னணிக் கவிஞர்.*

*மக்களை, உலக மக்களை, அனைத்து உயிர்களை நேசிப்பவனே உண்மையான மனித நேயம் மிக்க மார்க்சிய சிந்தனையாளன். இதை இந்நூலின் சீரிய படைப்புகள் வழி சரியாக மெய்ப்பித்தார் - கவிஞர் ஆரிசன், தமிழகத்தின், ஏன். இந்தியாவின் எழுத்துலகிற்கு படைப்புலகிற்குப் பெருமை*

*சேர்க்கும் கவிஞர் ஆரிசன் மென் மேலும் பல படைப்புகளை நாட்டிற்களித்து வெற்றி நடை போட நெஞ்சார வாழ்த்துகிறேன். இம்மாதிரி நல் முயற்சிகளுக்கு மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும்.*

*வெல்க வாழ்க*

***அன்பன்,***

**கலைமாமணி கவிஞர் பொன்னடியார்**

ஆசிரியர்,
'முல்லைச்சரம் மாதஇதழ்'
58, துரைசாமி சாலை,
வடபழனி, சென்னை – 28.
செல்பேசி : 94444 60748

# அரும்புகளுக்கான இலக்கியம் உன்னதமானது

*இலக்கியத்தில் அரும்புகளுக்கான பாடல் என்பது ஒரு வகை. அரும்புகளுக்கான பாடல்கள் எழுதுகிற படைப்பாளிகள் அருகி வருகிற காலம் தற்கால இலக்கியச் சூழலில் அரும்பு களுக்கான பாடல்கள் எழுதுவதை ஓர் இலக்கியப் பணியாகவே அங்கீகரிக்கத் தயங்குகிற மனோபாவம் நீடிக்கிறது,*

*இலக்கியம் என்பது அசாதாரணமான அறிவார்ந்த உயர் மனிதர்களால் மட்டுமே படைக்க முடியும் என்று நம்புகிற மனோபாவம் நம் இலக்கியச் சூழலில் நிலவுகிறது. அறிவார்ந்த உயர் (ஜாதி) மனிதர்களுக்கான உலகம், இலக்கிய உலகம். சராசரி வெகுஜன வாசகர்கள் பிரவேசித்து விடமுடியாத சிகர உயரப்புனிதம். அரும்புகளுக்கானது என்பது அந்த உலகில் பரிகசிக்கப்படும். 'குழந்தைத்தனமானது' 'சிறுபிள்ளைத்தன மானது' என்ற சொல்லாடல்கள், அறிவற்ற செயல்களை சித்தரிப்பதற்குப் பிரயோகிக்கப்படுகின்றன.*

*இலக்கியம் வெகு ஜனங்களுக்கானது என்ற நிலை வருகிறபோது அரும்புகளுக்கான பாடல்கள் எழுதுவோருக்கு உரிய மரியாதையும் புகழும் கிடைக்கும்.*

*வெகு மக்கள் வாசிக்கிற இதழ்கள்தான், சிறுவர்களுக்கான 'மணி'களையும், 'மலர்'களையும் வெளியிடுவதை கவனித்தால் தெரியும்.*

அறிவார்ந்த இருண்மை இலக்கியப் படைப்புகளை விடவும், அரும்புகளுக்கான இலக்கியம் உன்னதமானது; அரியது, என்னைப் பொறுத்தவரையில்.

அறிவு ஜீவிகள் போற்றிமயங்குகிற இருண்மை இலக்கியங்களைப் படைப்பதற்கு இன்டர்நெட் என்கிற இணையதளம் 'மேய்கிற' பழக்கம் இருந்தால் போதும். அரும்புகளுக்கான இலக்கியம் படைப்போருக்கு இணையதளத்தில் எதுவுமில்லை. உயர்ந்த அனுபவம் சார்ந்த அறிவும், கனிந்து குழைகிற மனசும் உள்ளவரால்தான் அரும்புகளுக்கான இலக்கியம் படைக்கமுடியும். அனுபவரீதியாக வளர்ந்த அறிவை கழற்றிவிடாமல் ஒரு குறிப்பிட்ட ஆழத்தில் ஆணி வேரைப்போல வைத்துக் கொண்டு, மழலை மனசாக மாறவேண்டும். மழலை மனசுக்குரிய வியப்பும் பிரமிப்பும், சிரிப்பும், கைதட்டலுமான பிள்ளைத்தனமான மனசாக மாறவேண்டும். கற்றறிந்து வசப்படுத்திய மொழியையெல்லாம் கழற்றிவைத்துவிட்டு, மழலைகளுக்கான மொழியை உயிர்முழுக்க நிரப்ப வேண்டும்.

உயிர் முழுக்க மழலை மொழி, மழலைத்தனமானதாக மாறிய மனநிலை, ஆழப்புதைந்த அறிவு மூன்றும் இணைகிற படைப்பாளிதாம் அரும்புகளுக்கான இலக்கியம் படைக்க முடியும்.

அரும்புகளுக்கான இலக்கியம் படைக்க முயன்று தோற்றவர்களில் முக்கியமானவர் உலகச் சிறுகதைகளின் தந்தையான மாக்ஸிம் கார்க்கி. ஜெயித்தவர்களில் முக்கியமானவர் இலக்கியமாமேதைலியோ டால்ஸ்டாய்.

அரும்புகளுக்கான பாடல்கள் எழுதுவதன் மூலம் வெற்றி பெற்றிருக்கிறார், ஆரிசன்.

அரும்புகளுக்கான பாடல்களில் அரும்பு மொழியே பயன்படுத்தியிருக்கிறார். எளிய மொழி. மலின மொழியல்ல. மழலை மனசைப் பிசைந்து அள்ளி ஊட்டுகிற அமுதம் போன்ற மொழி நடை.

*மனித உறவு, கல்வி, இயற்கையுடனான உரையாடல் என்று விரிந்து பரந்து செல்கிறது, பாடல்கள், பறவைகள், தேனீக்கள், பட்டாம்பூச்சிகள் என்று நிறைய உயிரினங்களுடனான பிரியத்தை வளர்க்கிற பாடல்கள்.*

*இணையதளம், தொலைக்காட்சி, போன்ற நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் சிறுவர், சிறுமிகளுக்கு அறிமுகமாயிருக்கிற மின்னணுவியல் காலம். அவை பற்றியும் பாடல்கள் இருந்திருந்தால் சிறப்பாக இருக்கும்.*

*ஐம்பது பாடல்களும் ஆரிசனின் இலக்கிய மேதைமையினால், மழலை மொழியால் உயர்ந்த இலக்கியத்தகுதி பெறுகின்றன.*

*வெற்றி பெற்றுவிட்ட ஆரிசனை இதய பூர்வமாக அரவணைத்து தோழமையுடன் வாழ்த்தி பாராட்டுகிறேன்.*

*வாழ்த்துக்களுடன்...*

என்றும் உங்கள்

**மேலாண்மை பொன்னுச்சாமி**

மாநில பொதுச் செயலாளர்

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம்

சென்னை.

ஸ்ரீ மலர் பிளாட்ஸ்,
பிளாட் எண். 13, முதற்தளம்,
புதிய எண். 21 /10, கண்பத் ராஜ் நகர்,
விருகம்பாக்கம், சென்னை–600 092.
பேச : 9142610700

# பாடலின் உயிராய் சொற்கள்.. .. ..

இலக்கிய வகைகளில், குழந்தை இலக்கியம் கூடுதலான கவனம் பெறவேண்டிய கால கட்டம் இது. குழந்தைகளும் சிறுவர்களும் புறத் தாக்கங்களால் தடுமாறும் இன்றைய சூழ்நிலையில், தடுத்தாட் கொள்வதும், தகுந்த வழி காட்டுவதும் கவிஞர்களின் சமூகக் கடமையாகும்.

'இன்று ஏடு தூக்கும் பாலகர், நாளை -நாடு காக்கும் காவலர்' என்கிற எதிர்ப்பார்ப்பில், அவர்களது மனங்களைப் பண்படுத்தவும், பக்குவப்படுத்தவும் பயன்படுவது பாட்டு. குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா தொடங்கி, தொடரும் நீண்ட வரிசையில் கவிஞர் ஆரிசன் இணைகிறார்; வரவேற்போம்; வாழ்த்துவோம்.

கவிஞர் ஆரிசன், புதுக்கவிதையால் நம் மனப் பூட்டுகள் திறந்தவர்; ஹைக்கூ கவிதைகளில் அற்புதம் படைத்து வருபவர். குழந்தை இலக்கிய உலகில் ஒரு குறிப்பிட்ட இடத்தைப் பெறுவார்- என்கிற நம்பிக்கையைத் தருபவர்.

இந்தப் பள்ளிக்கூட மைனாக்கள் நூலில் குழந்தைகளின் மகிழ்ச்சியை மட்டுமே முன்னிலைப்படுத்தும் பாடல்களும் உள்ளன; அறிவுரை என்னும் அருமருந்தை வார்த்தைச் சுளைகளின் இடையிடையே வைத்துப் பக்குவமாகக் கொடுக்கும் பாட்டுக்களும் உள்ளன.

விலங்குகள், பறவைகள் என்றால் குழந்தைகளுக்கு விருப்பம். அவற்றின் மூலம் நீதி சொல்லும் 'ஈசாப் முறை' யை கவிஞர் ஆரிசனும் பின்பற்றி பாடல்கள் அமைக்கிறார்.

*ஒரு காக்கையின் மூலம்*

**“ஒன்று சேரும் உணர்வுமே**
**காகத் துக்கு இருக்குது; அது,**
**வென்று காட்ட நமக்குமே**
**என்றும் பாடல் சொல்லுது!**

*என ஒற்றுமை உணர்வை உணர வைக்கிறார்.*

*‘தேனீக்கள்’, ஓர் அறிவியல் பாடலுக்கு அழகான எடுத்துக் காட்டு! எறும்பின் சுறுசுறுப்பு எல்லோருக்கும் தெரியும்.*

**‘சுறுசுறுப்பாய் எறும்புகள்**
**சுற்றித் திரிந்து வாழுமே!’**

*என்று சுட்டிக்காட்டுகிற கவிஞர், சுற்றித் திரிந்தாலும் எறும்புகள்,*

**‘சுற்று முற்று பாராமல்**
**உணவைத் தேடிப் போகுமே!’**

*என்று பாடுகிற போது, குழந்தைகளுக்கு ஒரு வேலையில் கவனச்சிதறல் ஆகாது என்பதையும் தொட்டுக் காட்டுகிறார்.*

*இப்படி, இன்னும் குழந்தைகளுக்குப் பிடித்த சிட்டுக்குருவி, கிளி, பட்டுப்பூச்சி, மின்மினி போன்ற உயிரினங்கள் பற்றிய பாடல்கள் மூலம், குழந்தைகளுக்கான கருத்துக்களை உணர வைக்கிறார்.*

*குழந்தைகள் விரும்பும் நிலா, வானம், சூரியன், மழை, நட்சத்திரங்கள் - என இயற்கையைச் சின்ன மனங்களில் வண்ணப் படங்கள் காட்டுகிற கவிஞர், அதில் சிறுவர்களுக்குப் பாடமும் ஊட்டுகிறார்.*

**‘வானம் நிறத்தைக் கொடுத்தது;**
**கடலும் வாங்கி மகிழ்ந்தது!’.**

*என்னும் வரிகளில் கடல் நீலம், வான நீலத்தின் பிரதிபலிப்பு என்கிற அறிவியல் கருத்தைப் புரிய வைக்கிறார்.*

*நிலவு, குழந்தைகளின் குதூகலம். அதை அழகாகக் கொண்டாடுகிறார் கவிஞர். ஒரு குழந்தையின் பார்வையில்,*

**'மூழ்கிக் கடலில் இருந்தாலும்
மூச்சுத் திணறிப் போகாமல் – நீ
முழுமதி வானில் நடக்கின்றாய்!'**

*என்று வியக்க வைக்கிறார்.*

*வான மைதானத்தில்,*

**'வந்து போகும் சூரியன் நிலா
பந்துகள் போல'**

*என்கிறார். வேறொரு பாடலில், குழந்தையைப் பார்த்து, அந்த*

**'விசை மிகுந்த பந்துபோல
உலகில் என்றும் உலவிடு!'**

*என்று கூறி, திசை மாறாத தினக் கடமையை சிறுவர்க்கு நினைவூட்டுவார், கவிஞர்.*

*பள்ளிக்கூடம் கல்விக் தோட்டம்! விவேகானந்தர் எதிர்பார்க்கும் 'மனிதனை' உருவாக்கும் கலைத் தோட்டம்.*

**'வெள்ளை மனதை வளர்க்கவும் – நாம்
பள்ளிக் கூடம் பறக்கிறோம்!'**

*என்கிறார் கவிஞர். பிள்ளை மனது இயல்பில் வெள்ளை மனது! பிறகேன் அதைப் பள்ளி வளர்த்தெடுக்கும்; நல்ல பிள்ளைகளை வார்த்தெடுக்கும்! 'வளர்க்கவும்' என்கிற ஒரு சொல் - பாடலின் உயிர்! அது, பள்ளியின் முக்கியத்துவத்தையும், படிப்பின் தத்துவத்தையும் விளக்குகிறது!*

*பள்ளி என்றால்; ஆசிரியர்? அது ஒரு பாடல்! ஆசிரியர்தான் குழந்தைகளுக்கு 'ரோல் மாடல்; நாயகர்!*

**'ஆசான் அன்பு நமக்குமே – நாளும்
நேசம் வளர்க்க உதவுமே!'**

*மாணவக் குழந்தைகளின் குருபக்தி இது!*

*அத்தகைய ஆசிரியர்,*

**‘மழைதரும் மேகமாக**
**இருந்திடுவாரு – கல்வி**
**இழையில் ஆடை நெய்து**
**அணிவித்திடுவாரு!’**

*என்கிறார், நூலாசிரியர். அறியாமை எனும் நிர்வாணம் மறைக்கும் கல்வி ஆடை தருபவர் என்பது தான் பாடலின் நயம்!*

*‘குட்டிப் பயலே!’ பாடலில், சிறுவர்கள் சாதனைச் சிகரம் ஏறும் வழிகளைக் கூறுகிறார்.*

**‘கோட்டைக் கனவை**
**மனதில் ஏந்தி**
**வாழ்வை வெல்லடா!‘**

*என்கிறார் அடுத்து, குழந்தைகளின் ‘கனவு’ மேதை அப்துல் ‘கலாம்’ பற்றியும் ஒரு பாடல் வைத்துள்ளார்.*

**‘விஞ்ஞான அறிவையுமே**
**வளர்க்கச் சொல்லுவார்;**
**மெய்ஞானக் கதைகளுமே**
**சொல்லி மகிழுவார்!‘’**

*அருமையான படப்பிடிப்பு!*

*பள்ளி வாசல் காணாத பிறைநிலாக்கள்*

**‘கனவுகள் கருக**
**கந்தகக் கிடங்கில் – தினமும்**
**தீக்குச்சிகளாய்க் கருகும்’ குழந்தைகள்,**
**‘சிலேட்டை எடுத்துப்**
**படிக்கிற வயதில்**
**சித்தாளாகப் போகிற’**

*- சிறுவர்கள் - என, படிக்க வேண்டிய பால வயதுப் பிள்ளைகள் வேலைக்குப் போகிற கொடுமையை கடுமையாகக் கண்டிக்கிற கவிஞர், ‘கல்வி’ என்றும்*

**'சிறகு விரித்துப்
பறந்து நீயும்
வானைத் தொடலாம்
மறக்காதே!'**

*மார்க்கமும் காட்டுகிறார்.*

*'பச்சையம் நிறைந்த வாழ்க்கைக்கு - மரம் நிச்சயம் வேண்டும் பூமிக்கு!' என்று உலகம் துவங்க வேண்டும் என்கிற எண்ணத்தை பிள்ளைகள் மனதில் பசுமரத்து ஆணிபோல் பதிய வைக்கிறார்,*

*'சாலையோர மரங்களே' பாடல், சுற்றுச் சூழல் கல்வியின் சிறப்புப் பாடல்!*

*நல்லன விதைக்கும் நாற்றங்கால்கள் பிள்ளை மனங்கள் விதைத்திருக்கிறார்; 'உண்மை, உழைப்பு, ஊக்கம்' - மூன்று விதைகள்; 'அன்பு பண்பு' - இரட்டைக் குணங்கள்; 'ஒழுக்கம்' ஒற்றைப் பண்பு விதைத்திருக்கிறார். நல்விளைச்சலுக்கு வாழ்த்துக்கள்.*

**மலர்மகன்**
தொலைபேசி : 044–22470158
கைபேசி : 9941469020

இ1. சில்வர் ஸ்ட்ரீக் அடுக்ககம்,
எண்.3 மேடவாக்கம் சாலை,
கீழ்க்கட்டளை,
சென்னை 600 117.

# குழந்தைகளின் மொழியில் இசை

*கவிஞர் ஆரிசன் மின்துறையில் பணியாற்றும் மென்மனதுக்காரர். மின் இலக்கியப் பூங்காவின் மாநில இணைச் செயலர். மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்படும் தொழிற்சங்கப் பொறுப்பாளரும் கூட.*

*தமிழ் வழிக்கல்வியில் தனது இரண்டு மகன்களையும் படிக்க வைத்து வெற்றி கண்டவர். ஆரிசனுடைய ஒன்பதாவது நூலாகும் இது. இரண்டாவது குழந்தைப்பாடல் தொகுதி.*

*பொதுவாக குழந்தைகளுக்கே கூட விளையாட நேரம் கிடைக்காத காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். குழந்தைகளோடு விளையாடி மகிழ்வதை பல பெற்றோர்கள் பகுதி நேரப் பணியாகக் கருதுகிறார்கள். குழந்தைகளுடன் விளையாடும்போதுகூட குழந்தைகளைத் திட்டிக் கொண்டும், அவர்களுக்குக் கட்டளையிட்டுக் கொண்டும் விளையாடும் பெரியவர்கள் தான் இன்று இருக்கிறார்கள். மகிழ்ச்சியாக விளையாடச் சென்று, பிறகு அழுது கொண்டு திரும்பும் மழலைகள் நம் நெஞ்சில் ஈரம் கசிய வைக்கிறார்கள். ஆனால் ஆரிசன் குழந்தைகளோடு விளையாடுகிறார். மிக முக்கியமாக தானும் குழந்தையாக மாறி விளையாடுகிறார். அதனால் தான் குழந்தைகளுக்காகப் பாட அவரால் முடிகிறது.*

*தினமணி சிறுவர்மணியில் ஆரிசனின் பாடல்களைப் பார்க்கும் போதெல்லாம் உடனே அழைத்துப் பாராட்டி நாங்கள் மகிழ்ந்திருக்கிறோம்.*

*குட்டிப்பாப்பா.. பாடலில் -*

**"கால நேரமின்றித் தான்**
**கதைகள் கேட்டுத் துள்ளுவாள்"**

*என்ற வரி எல்லார் வீடுகளில் நடக்கும் குழந்தைகளின் வேண்டுதலை குதூகலத்துடன் படம் பிடிக்கிறது.*

*பந்தும் தேனீக்களும், காக்கைகளும், குண்டு மல்லியும், வானமும், எறும்பும், நிலவும் இந்நூலில் பாடு பொருள்களாகியிருக்கின்றன. உண்மையில் இவர் எடுத்துக் கொண்டிருக்கும் பாடு பொருள்கள்தான், குழந்தைகள் உலகத்தின் நாயகனும் நாயகியுமாய் இருக்கிறார்கள் என்று உறுதி செய்கிறார்கள் உளவியல் அறிஞர்கள்!*

*இப்படிப்பட்ட பாடல்கள் இடையே, காமராசர், பட்டுக்கோட்டையார், அறிஞர் அண்ணா, அப்துல் கலாம் குறித்தும், குழந்தைகளின் மொழியில் இசை ஒழுங்கோடு பதிவு செய்திருக்கும் ஆரிசனின் கவிதை ஆற்றல் வியந்து பாராட்டுதற்குரியதாய் இருக்கிறது.*

*இந்தக் குழந்தை உள்ளத்தை ஆரிசன் தக்க வைத்துக் கொள்ளட்டும்; தமிழ்க்கவிதை உலகம் இன்னுமோர் அழ.வள்ளியப்பாவைப் பெற்று மென்மேலும் வளரட்டும்.*

*மின் இலக்கியப் பூங்கா வழங்கும் இனிய வாழ்த்துக்கள்.*

அன்புடன்

**தமிழ் இயலன்**

மாநில பொதுச் செயலாளர்,
மின் இலக்கியப் பூங்கா
எஸ். 3, த.மி.வா. குடியிருப்பு
கொரட்டூர், சென்னை – 80.
பேச : 94430 19087

# என்னுரை

*சமூகத்தின் சாட்சியாகவும், சமூகத்தை தீர்மானிக்கும் சக்தியாகவும் குழந்தைகளைப் பார்க்கும் மனோபாவம் ஒரு படைப்பாளிக்கு வேண்டும்.. குறும்பும், விளையாட்டும் குழந்தைகளிடம் பிரிக்க முடியாத பாசக்கயிறு.*

*இன்றைய சூழலில் இப்பாசக்கயிறு அறுபட பொதிசுமக்கும் சூழ்நிலையை கல்விமுறை சுவீகரித்துக் கொண்டுள்ளது. விளையாட்டும். குறும்பும் தெரியாத குழந்தைகளாய் வளர்ந்து வரும் சூழல் உருவாகிவிட்டது. குழந்தைகளுக்கான மகிழ்ச்சி, இதில் பறிபோயுள்ளது என்பதை யாரும் எண்ணிப்பார்ப்பதில்லை,*

*கட்டாயப்படுத்தி பள்ளிக்கூடம் அனுப்புவது தொடங்கி கண்டிப்பும், கட்டாயத்தை மூளையில் திணித்து டாக்டர், என்ஜினியர் தவிர்த்து வேறு துறைகளை கனவிலும் தெரிந்து கொள்ளாத நிலையினை குழந்தைகளுக்குப் பெற்றோர்களே எண்ணங்களாய் விதைக்கிறார்கள். சமீபத்தில் வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன் எனும் நோபல்பரிசு பெற்ற விஞ்ஞானி 'என் மகன் 2 ஆண்டுகள் அறிவியல் படித்தான். பிறகு அவன் தனக்கு இசையின் மீது நாட்டம் என்றான். உடனே உன் விருப்பம் தான் என்று சொன்னேன். தற்போது அவன் சந்தோஷமாக சங்கீதம் கற்றுக் கொண்டிருக்கிறான்' என்றார்.*

*மழலைகள் பால்வாடிக் கல்வி தொடங்கி பள்ளிக்கூடக் கல்வி முடியும் வரை பால் மனத்திற்கு சொந்தக்காரர்கள். பிஞ்சுகள் மனத்தில் நஞ்சினை வளர்க்காமல் நன்னெறியோடு, சுய ஒழுக்கம், சமூக ஒழுக்கம் ஆகியவற்றைக் கல்வியோடு*

பயின்று அறிவுப் பயிரில் இவர்கள் தளிர்விட்டு செழித்திட வேண்டும், என்பதே சான்றோர்களின் விருப்பமாகும்!.

குழந்தைகளுக்கான நுட்பமான அறிவை நாம் பாராட்டத் தயங்கக் கூடாது,

இருபதாண்டுகளுக்கு முன்னால் ஒரு நான்கு வயதுக் குழந்தை உறவினர்கள் புடைசூழ நடுவில் அமர்ந்திருக்கும் அந்தக் குழந்தையைப் பார்த்து அப்பா பேர் என்ன? அம்மா பேர் என்ன? என்ற கேள்விகளோடே கறுப்பு நிறம் கொண்ட தந்தையும், சிவப்பு நிறம் கொண்ட தாயையும் பார்த்துவிட்டு உங்க அம்மா, அப்பா கறுப்பா, சிவப்பா? என்றார்கள். குழந்தை மௌனமாக இருந்தான். மீண்டும் உங்க அம்மா கறுப்பா சிவப்பா? உங்க அப்பா கறுப்பா சிவப்பா? என்று மீண்டும் கேள்விகளைக் கேட்டுக் கொண்டே இருந்தனர். அந்தக் குழந்தை அமைதியோடு, மௌனத்தோடு எழுந்து உறவு வட்டத்தைத் தாண்டி வெளியேறி வீட்டுக்குள்ளான ஒரு சுவற்றில் சார்ந்து கொண்டு சுவற்றில் அடித்திருந்த சிவப்புக்கலர் வண்ணத்தைக் கைகளால் தொட்டுக் காட்டி இது தான் சிவப்பு என்றது அந்தக் குழந்தை. எனக்கு ஒரே வியப்பு! அந்தக் குழந்தையைக் கட்டி அணைத்து முத்தம் கொடுத்து, நீ மிகப் பெரிய அறிவாளியடா! எங்களை எல்லாம் முட்டாளாக்கி விட்டாயே என்று சொன்னேன். நான் சொன்னது குழந்கைக்கு அர்த்தம் விளங்கியதோ இல்லையோ குழந்தை சிரித்தான். தொட்டுக் காட்டிய சுவருக்குப் பின்னால் குழந்தை குறித்து ஒரு குறும்படமோ திரைப்படமோ கதைக்கருவாகலாம். இதில் குழந்தையின் மனநிலையை மட்டுமே ஆய்வுக்குரியதாக்கலாம். பல காட்சிகள் விரியும்.

சமீபத்தில் ஒரு உறவுக்கார டாக்டர் வீட்டுக்குச் சென்ற போது மூன்றரை வயதுக் குழந்தை தன் தாயின் உடல் நலம் பார்த்த டாக்டர், குழந்தையைப் பார்த்து என்ன படிக்கறப்பா? என்றார். குழந்தை புத்தகம் படிக்கிறேன் என்று பதில் சொன்னான். டாக்டர் சிரித்து விட்டார். அந்தக் குழந்தையின் நுட்பமான பதிலில் அவர் அசந்தும் போனார்.

*இப்படி குழந்தைகளின் அறிவு நுட்பத்தில் பெற்றோர்கள் தொடங்கி ஆசிரியர்கள், பேராசிரியர்கள், கலைஞர்கள், அறிஞர்கள், அறிவியாளர்கள் என பல்துறை வித்தகர்களும் வியந்து போகிறார்களே! இதுதான் பூகோளத்தின் குழந்தை உலகத்தின் பூரிப்பு!*

*இப்படிப்பட்ட குழந்தை உலகத்தில் எல்லோராலும் பிரவேசிக்க முடியவில்லை. பாரதி, பாரதிதாசன், அழ வள்ளியப்பா, தணிகை உலகநாதன், சி. விநாயகமூர்த்தி, டாக்டர் பூவண்ணன் என பிரவேசித்து வெற்றி கண்டவர்களுக்கு மத்தியில் எனது பாடல்கள் குழந்தைகளுக்கான குறும்பு, விளையாட்டு, கல்வி, இயற்கை, பறவைகள், கதைகள் என விரிந்து குழந்தை மனதை செம்மைப்படுத்தும் பாடல்களாக இருக்கும் என நம்புகிறேன்.*

*எதிர்கால சமூகத்தில் இந்த நாற்றங்கால்கள் பெருவெளியில் முற்றிய பயிராகி சமூகத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில்தான் பகுத்தறிவுப் பந்தியில் இந்தப் பாடல்கள் பதியமிடப்பட்டுள்ளது.*

*இந்நூலை அழகுற பதிப்பித்து குழந்தைகள் நெஞ்சம் கவர வைத்திருக்கும் என் இனிய நண்பன் பா. உதயகண்ணன் மற்றும் இந்நூலுக்கு குழந்தைகளின் மனசு தொட்டு வாழ்ந்து கொண்டிருக்கும் என் மதிப்பிற்குரிய தமிழ்ச்சான்றோர்கள் கலைமாமணி பொன்னடியார், மேலாண்மைப் பொன்னுச்சாமி, கவிஞர் மலர்மகன், கவிஞர் தமிழ் இயலன் ஆகியோர் செறிவுமிக்க நூல் அணிந்துரையை நெஞ்சு தொட்டு எழுதியுள்ளது குழந்தைகளுக்கு ஊக்க மருந்தாக இருக்கும். அட்டைப்படத்துக்கான ஓவியத்தை வழங்கிய ஓவியக்கவி தோழர் ஸ்ரீ ரசா, சிறுவர் பாடல்களை அலங்கரிக்கும் உள் ஓவியங்களை வரைந்து விரைந்து அனுப்பிய ஓவியச் செம்மல் அன்பழகன் மற்றும் மெய்ப்பு பார்த்து உதவிய குழந்தை எழுத்தாளர் இரா. மனோன்மணி மற்றும் என் துணைவியார் ந. அமுதா ஆகிய அனைத்து இனிய உள்ளங்களுக்கும் என் அன்பின் வணக்கமும் நன்றியும்....!*

வளர்த்து .... செழித்து சமூகத்தின் உயர்ந்த நோக்கங்களுக்கு குழந்தைகளும் தங்கள் பங்கைச் செலுத்த இந்த பள்ளிக்கூட மைனாக்கள் - நூல் உதவினால் என் நெஞ்சும் குழந்தை மனசாய்த்துள்ளும், விளையாடி மகிழும்!

குழந்தைகளின் கரங்களில் இந்த நூல், குழந்தைகளின் உலகில் பிரவேசிக்க தவழ்ந்து பாடிப் பரவசமானால் குழந்தைகளின் நெஞ்சாங்குழியில் இசை வித்திட்டால் அதுவே இந்த பள்ளிக்கூட மைனாக்களின் வெற்றி என்றே மகிழ்வேன்நெஞ்சை நிமிர்த்திச் சொல்ல, இது உதவும்.

சிறுவர்கள் வாஞ்சையுடன்

**ஆரிசன்**

சாவித்திரி ஆரிமுத்து இல்லம்.
1126/2, எம்.ஜி.ஆர். நகர்
கீழ்க்கொடுங்காலூர் அஞ்சல்
வந்தவாசி வட்டம் – 604403
திருவண்ணாமலை மாவட்டம்
பேசி : 9442311118
aarison.2008@Gmail.com
aarison2009@yahoo.co.in.
Nesavu.blogspot.com.

# குட்டிப் பாப்பா!

குட்டி குட்டி பாப்பா
எட்டி எட்டிப் பார்ப்பாள்
கிட்ட வந்து அவளுமே
கட்டி முத்தம் கேட்பாள்!

ஆலமர நிழலில் நின்றே
அன்பாய் ஊஞ்சல் ஆடுவாள்
கால நேரமின்றி தான்
கதைகள் கேட்டுத் துள்ளுவாள்

சொப்பு விளையாட்டுமே
சூழ்ந்து நின்று ஆடுவாள்
நட்புக்காகச் சோறு பொங்கி
பொம்மைக்குமே ஊட்டுவாள்!

சிட்டுக் குருவி போலவே
சுறுசுறுப்பாய் ஓடுவாள்
பட்டுக் கன்னம் முழுவதும்
சிரிப்பை அள்ளிப் பாடுவாள்!

# உண்மைத் திருக்கோயில்

ஆசிரியர் என்று சொன்னால்
அறிவு ஊறுமே – நாம்
கல்வி கற்று சிறப்பித்தால்
வாழ்வும் சிறக்குமே!

மெழுகுவர்த்தி போலவே
உருகிடு வாரு – கல்வி
அழகைக் கொடுத்துமே
சிறந்திடு வாரு!

உண்மைத் திருக்கோ யிலாக
விளங்கிடு வாரு – கல்வி
நன்மை யாவையும்
தான் சொல்லிடு வாரு!

சொல்லித் தரும் பாடத்திலே
சிறந்திடு வாரு – கல்வி
தரும் சேவையைத்
தான் கூறிடு வாரு!

யாரையுமே கண்மணி போல்
பார்த்திடு வாரு – கல்விப்
பாரை உயர்த்தும் கருவியெனக்
காணச் சொல்வாரு!

மழை தரும் மேகமாக
இருந்திடு வாரு – கல்வி
இழையில் ஆடை நெய்து
அணிய வைப்பாரு!

இரக்க குணம் இருக்கவுமே
எண்ணிடு வாரு – கல்வி
அரக்க குணம் அழித்திடுமெனச்
சொல்லிடு வாரு!

பிரம்பெடுத்து அடிக்க மனம்
வெறுத்திடு வாரு – கல்வி
உரமிட்டு வளர்க்கத் தான் கருத்து ரைப்பாரு!

ஞானம் சுரக்கும் கண்களைத்
திறந்திடுவாரு – கல்வி
ஊனமின்றிக் கற்கவும்
தான் உதவிடு வாரு!

## அறிவைச் சேமி

அள்ளித் தரும்
அறிவையுமே
சேமிக்க வேணும் – அதற்கு

பள்ளிக்கூடம்
போக வேணும்
பாப்பாவே நீயும்!

கல்விக் கண்ணைத்
திறந்து காட்ட
சொல்லிட வேணும் – அங்கே

காட்சி தெரிய
மகிழ்ச்சி பொங்க
பேசிட வேணும்!

சொல்லிப் புரிய
வைக்கவே தான்
புத்தியும் வேணும் – அதில்

சுத்தத் தங்கம்
சுடர் விடவும்
நெருப்பே வேணும்!

**இட்டுக் கட்டிப்**
**புரிய வைக்க**
**ஆசான் வேணும் – அதை**

**மெட்டுக் கூட்டி**
**இனிமையாக்க**
**இயற்கை வேணும்!**

# கனவு

உள்ளுக் குள்ளே
உறங்கிக் கிடக்கும் பாரு!

வெள்ளித் திரையில்
ஓடி வரும் பாரு!

கறுப்பு வெள்ளையாக
ஓடும் படம் பாரு!

திறக்காத கண்ணுக்குள்ளே
தொடரும் படம் பாரு!

மறந்து போன கதைகளும்
சுரந்து வரும் பாரு!

உறவுக் கொடியெல்லாமே
சுற்றி வரும் பாரு!

உயர்திணையோ அஃறிணையோ
உருப்படியாய்ப் பாரு!

சுயசிந்தனையில் கலர்கலரா
ஓடி வரும் பாரு!

எழுதாத கதையெல்லாம்
படமாகும் பாரு

பழுதின்றி திரையில் தான்
ஓடிச் சிரிக்கும் பாரு!

# அறிஞர் அண்ணா அறிவுப் பாற்கடல்

காஞ்சிபுரம் தந்த
காளை யவன்
காரிருள் போக்கும்
சூரியவன்!

தஞ்சமென வந்தவர்க்கு
தாசனவன் – அண்ணா
தாடிக்காரப் பெரியாரின்
தம்பியவன்!

பேச்சென்றால் முக்கனியின்
சுவைதான் என்பான் – தமிழ்
மூச்சாகி அரசியலின்
ஆணிவேரைக் கண்டான்!

காவினியே குளிர்தரும்
மரமாய் நின்றான் – தமிழ்
பாநடையில் பேசியுமே
பகுத்தறிவைச் சொன்னான்!

ஆய்ந்து நூலைக் கற்றதினால்
அறிஞனாகி நின்றான் – தமிழ்
சாரதியாய் நாட்டினிலே
தேரில் பவனி வந்தான்!

கலகக்காரப் பெரியாரின்
கண்ணிமையில் நின்றான் – தமிழ்
திலகமிட்டு வாழ்த்துகின்ற
வேந்தனாகிச் சென்றான்!

முக்கனியில் சாறெடுத்து
முத்தமிழைச் சொன்னான் – தமிழ்
பாற்கடலில் தவமிருந்து
அறிவுக் கடல் வென்றான்!

குட்டையான உருவத்திலே
கோடி இதயம் தொட்டான் – தமிழ்
சாட்டையிலே பம்பரத்தை
வானம் வரை விட்டான்!

எத்தனையோ தம்பிகளை
நாட்டினிலே கண்டான் – தமிழ்
முத்துவேலர் திருமகனை
முதல்' என்று சொன்னான்!

நிலவாகி ஊர் முழுக்க
சுற்றியும் வந்தான் – தமிழ்
சூரியனாய் மக்களுக்கு
விடிவையும் தந்தான்!

நூலாடை நெய்தவர்க்கும்
மனமுருகி நின்றான் – தமிழ்
ஆடை சூடிக் கொண்டும்
நெசவாளி என்றான்!

ஏழை பாழை மக்களுக்கு
எளிய அண்ணன் ஆனான் – தமிழ்
குடிலை வென்று கோபுரமாய்
உயர்ந்து வணங்க நின்றான்!

## அண்ணாந்து பார்க்கலாம்

அண்ணாந்து நாம் பார்க்கலாம்
ஆசை வானில் சுற்றலாம்
என்ன வென்று கேட்கலாம்
நேரில் இடியைக் காணலாம்!

விண்ணில் சுற்றி ரசிக்கலாம்
வீணை இசையும் மீட்டலாம்
வண்ண மேகம் கலைவதை
கண்ணைச் சிமிட்டிப் பார்க்கலாம்

நட்சத்திரக் கூட்டங்களை
நன்கு பார்த்து ரசிக்கலாம்
உச்சி வானில் நிலவிடமும்
உள்ளம் தொட்டுப் பேசலாம்.

அன்பு கொண்ட பூமிக்கு
அழுதே நீரை சொரிந்திடும்
கனவு கண்ட வானமும் – அந்தக்
காட்சி கண்டு மகிழ்ந்திடும்.

# உலகம் உனக்குள்

பூமிக்கு நீயே
புது விதை!

புரட்டி எடுக்கும்
மழை விதை!

காலம் கனிய
வரும் விதை!

காட்சிக் கதுவும்
கனி விதை!

உலகம் உனக்குள்
ஒரு விதை!

உயிர் வளர்க்கும்
கரு விதை!

அன்பு மனங்கள்
பாகாய் உருகிட

இன்பம் பெருக
வரும் விதை!

இழைபோல் இறங்கி
பூமியில் பெருக

தழைத்து ஓங்கும்
உயிர் விதை!

சிறுதுளி பெருதுளி
ஆகும் விதை!

பருவம் தாண்டியும்
தரும் விதை!

# மூன்று வகை தேனீக்கள்

திரிந்து பறந்து சேர்ந்துமே
கூடு ஒன்று கட்டிடும்
தேனைச் சேர்த்து சுரந்து
கூட்டிலது தங்கிடும்!.

மூன்று வகைத் தேனீக்கள்
முதலிடம் ராணித் தேனீக்கே
வேலைக்காரத் தேனீக்கும்
அடுத்தே நிற்கும் ஆண்தேனீ!

அரசை ஆளும் அதிகாரம்
இராணித் தேனீக் குண்டாமே!
ஆண் தேனீ யாவையும் தான்
அதிகாரமற்றே இருக்குமாம்!

வேலைக்காரத் தேனீயோ
திரிந்து அலைந்து தேன்சேர்க்கும்
காற்றை சிறகால் வீசியுமே
கூட்டைக் குளிர்ச்சி யாக்கிடும்!

உணவுப் பற்றாக் குறையானால்
கொடுக்கு இல்லா ஆண் தேனீ
அடித்து விரட்டிக் கொல்லுமே
உணவாய் மாறிப் போகுமே

**கை விரல்கள் ஐந்தினைப் போல்**
**கண்கள் ஐந்து உண்டாமே – அது**
**தலைக்கு மேலே மூன்றோடு**
**முன்னம் இரண்டும் இருந்திடுமே!**

# குட்டிப் பயலே

குட்டிப் பயலே..
குட்டிப் பயலே..
குறும்பு நீயடா—நீ

கோட்டைக் கனவை
மனதில் ஏந்தி
வாழ்வை வெல்லடா!

சமூகத் தீமை
உணர்ந்து நீயும்
கோபம் கொள்ளடா – நீ

சரித்திரம் படைக்க
சாதி மதப்
பேயை வெல்லடா!

உண்மை பேசி
உலகை வெல்ல
உறுதி கொள்ளடா – நீ

கள்ளமின்றி
காந்தமாகி
மனதை வெல்லடா!

## கலாம் மாமா

கலாம் மாமா வந்திடுவார்
கன்னம் தட்டிச் சிரித்திடுவார்
வெள்ளை மனம் கண்டுமே – அவர்
உள்ளம் உருகிப் பேசிடுவார்!

குழந்தை உள்ளத் தோடு தான்
கோட்டு மாட்டுவார் – அவர்
நேர் வகிடாய் தலைசீவி
சிரித்து மகிழுவார்!

குழந்தை என்றால்
பிரிய மென்று பெயரெடுத்தவர்
நேரு மாமா வாரிசாக – அவர்
இன்றும் திகழ்பவர்

விஞ்ஞான அறிவையுமே
வளர்க்கச் சொல்லுவார் – அவர்
மெய்ஞானக் கதைகளுமே
சொல்லி மகிழுவார்!

உழைத்து வாழ வேண்டுமென்று
உரக்கச் சொல்லுவார் – அவர்
குழந்தை உள்ளத்தோடு பேசவுமே
என்றும் துள்ளுவார்!

**கேள்விகளைக் கேட்டுக் கேட்டு**
**பதிலை வாங்குவார் – அவர்**
**விடையின்றி முழித்தாலும்**
**பதிலைச் சொல்லுவார்!**

**எந்த மத வெறுப்புமின்றி**
**பழகச் சொல்லுவார் – அவர்**
**சொந்த மதம் தாண்டி**
**மனித அன்பைக் காட்டுவார்!**

# காக்கைப் பாசம்

வானத்திலே கடுகுபோல
காட்சிக்கது தெரியுது – அது
காற்றை எதிர்த்துப் பறந்துமே
வாழ்வினையும் வெல்லுது

கொத்தி கொத்தி உணவையும்
கூட்டம் சேர்ந்து உண்ணுது – அது
கத்திக் கத்தி அழைத்துமே
தன் இனத்தைச் சேர்க்குது!

கூரை மீது அமர்ந்துமே
கரைந்து கத்தி அழைக்குது – அது
வேரை நமக்குக் காட்டியே
வாழ்வின் பொருள் சொல்லுது!

நிறத்தில் அடிமை வேண்டாமென
உலகைச் சுற்றி வருகுது – அது
வெள்ளை இனத்தின் மீதுமே
வெறுப்பு இன்றிப் பழகுது!

ஒன்று சேரும் உணர்வுமே
காகத்துக்கு இருக்குது – அது
வென்று காட்ட நமக்குமே
என்றும் பாடம் சொல்லுது!

**எங்களிடம் காட்டும் பாசம்**
**மக்களுக்குக் காட்டுங்கள் – நிற**
**பேதமின்றி உலகையுமே**
**மனித நேயம் ஆக்குங்கள்!**

# கடல் போல் கல்வி

கோடைக் காலம் வந்துமே
கூட்டமாக்கி மகிழுது – வாடைக்
காற்று வீசி தான் – நமக்கு
வாழ்த்து சொல்லி சிரிக்குது

பள்ளிக் கூட விடுமுறையும்
துள்ளி ஆட வைக்குது – மனம்
கள்ளமின்றி நம்மைதான்
ஒன்றாய் சேர்த்து வைக்குது!

வெயில் சூடு தாங்கிட
வேண்டும் மட்டும் பருகிடு – நம்
கையில் இளநீரை வைத்து
குடித்துச் சூட்டைத் தணித்திடு!

பாலும் மோரும் குடித்து
காலும் கையும் இயக்கிடு – தினம்
முடிந்த மட்டும் பழங்களோடு
உணவைச் சுவைத்து சாப்பிடு!

மனதுக்குள்ளே நண்பனாக
புத்தகத்தைப் போற்றிடு – நம்
கனவுலகின் லட்சியத்தை
உடலின் சூடாய் மாற்றிடு!

**கடல் போல கல்வியை நாமும்**
**அலையில் நீந்திக் கற்றிடுவோம் – நாம்**
**மலைபோல் உயர்ந்து வாழ்விலுமே**
**வானைத் தொட்டு மகிழ்ந்திடுவோம்!**

# மக்கள் கவிஞன்

சிட்டுப் போல பறந்தவன்
சிரசில் 'சம'த்தைச் சுமந்தவன்
பட்டுக் கோட்டை மண்ணிலே – அவன்
பிறந்து தவழ்ந்து வளர்ந்தவன்!

எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க
ஏந்தலாக நின்றவன் – அவன்
எட்ட நின்று பார்க்காமலே
பாட்டுப் பாடி வென்றவன்!

உழைக்கும் மக்கள் யாவருக்கும்
உண்மை நட்பாய் இருந்தவன் – அவன்
தழைத்து ஓங்கி வளர்ந்துமே
கன்னல் கரும்பாய் இனித்தவன்!

எலும்பும் தோலுமாய் இருந்துமே
பசிக்கு வழியைச் சொன்னவன் – அவன்
உலகம் யாவும் சிறந்திட
சுரந்து பாட்டைத் தந்தவன்!

பொதுவுடைமைப் பூங்காவில்
பூத்துக் குலுங்கி நின்றவன் – அவன்
சூதுவாது இன்றியே வாழ்வின்
சுகத்தை வென்றவன்!

உலகத் தரத்தில் பாடலை
எளிமையாகத் தந்தவன் – அவன்
கலகக் குரலை உயர்த்தியும்
பொதுமைப் பாடல் செய்தவன்!

கள்ளமற்ற வாழ்விலே
கண்ணீர் சிந்தி வாழ்ந்தவன் – அவன்
உள்ளம் போல இளமையில்
உயிரும் பிரிந்து போனவன்!

# கல்வி

கல்வி கற்று நாட்டையும்
கவனமாகக் காக்கணும் – அரசு
அள்ளி அள்ளிக் கொடுத்துமே
கல்வி சிறக்க உதவணும்!

பணத்துக்கான கல்வியினை
பாரமாக நினைக்கணும் – அரசு
சனத்துக்கான கல்வியை
நாளும் தேர்ந்து கொடுக்கணும்

சாதியற்று கல்வியிலே
சமத்துவமும் இருக்கணும் – அரசு
நாதியற்ற மனிதருக்கும்
கடைக்கண் திறக்க உதவணும்!

உழைப்பைப் போற்றக் கல்வியிலும்
உரிய பாடம் சேர்க்கணும் – அரசு
வாழை பலா மாவைப் போல
முக்கனியாய் இனிக்கணும்!

ஒரே நிறல் ரத்தமென்று
உரத்த குரலில் சொல்லணும் – அரசு
ஏற்றத் தாழ்வின்றியே
பொதுமை வாசம் வீசணும்

**மதங்கலந்த கல்வியை**
**வெறுத்து ஒதுக்கித் தள்ளணும் – அரசு**
**பேதமற்றுப் பழகிடும்**
**கல்விச் சாலை வளர்க்கணும்!**

# பையில் காற்றை நிரப்பி

கையில் பிடித்து மகிழலாம்
காலில் உதைத்து ஆடலாம்
பையில் காற்றை நிரப்பியும்
பிஞ்சுக் காலால் உதைக்கலாம்!

மனித வாழ்வில் மூச்சுமே
இருப்பு கொள்ள வைக்குமே
தென்றல் காற்றின் மூச்சுமே
பந்தை உயரப் பார்க்குமே!

புல் செழித்து வளர்ந்திடும்
தரையில் பந்தும் மகிழுமே
கல் செழித்த பூமியில்
பந்தின் உயிரும் போகுமே!

வானம் தொடும் பந்தினை
கானம் கூவி அழைக்குது
மந்திக் கூட்டம் யாவையும்
பந்தை உதைத்து மகிழுது!

சூர்ய நிலாப் பந்துமே
அழகு வானில் இருக்குது
ஊனமின்றி ஒளியினை
உலகெங்கும் பரப்புது

**பந்தின் செயல் பறப்பதே**
**பாரைச் சுற்றித் திரிவதே**
**வானப் பந்து என்றுமே**
**மனித வாழ்வைச் சுற்றுமே!**

# வண்டு வந்து சுற்றுது

குண்டு மல்லி மணக்குது
வண்டு வந்து சுற்றுது
உண்டு களித்து மகிழவும் – அது
சிறகில் அமர்ந்து சிரிக்குது!

தோட்டம் தேடி வருகுது
தொட்டி மீது சுழலுது
வாட்டமின்றிப் பறந்துமே – அது
பூக்கள் அழகை வெல்லுது!

மொட்டுச் சிறகை விரிக்குது
வண்டும் அதிலே அமருது
கட்டுப் பாட்டை நீக்கியே – அது
சத்தமின்றி நுழையுது!

தேனை ருசித்துக் குடிக்குது
மானைப் போல துள்ளுது
பூவில் கலந்த வண்டுமே – அது
பொன்னுலகெனச் சொல்லுது!

## பசுமைத் தாயகம்

பச்சையம் நிறைந்த வாழ்க்கைக்கு – மரம்
நிச்சயம் வேண்டும் பூமிக்கு !
பாலையாகும் மண்ணாலே – புவி
சோலைகளழியும் பின்னாலே !

இயற்கை வளங்கள் பூமிக்கு – தினம்
இனிய கொடையாய் இருந்துவிடும்
செயற்கை வளங்கள் வரிசையிலே – புவி
மாசு மண்டலம் விரிந்துவிடும்!

அன்பை விதைத்து பூமியிலே – இனி
அமைதிப் பயிரை வளர்த்திடுவோம்
கண்போல் காத்து அதையுமே – நம்
அறிவால் வளர்த்து வாழ்த்திடுவோம்!

# உறவு விதை

விதைகள் பூமிக்கு அழகாகும் – நாம்
விதைத்து வளர்த்தால் உறவாகும்!
கதைகள் சொல்லி புவியினையும் – நாம்
கனவாய் மாற்றுதல் சிறப்பாகும்!

கண்ணாய் இருந்து காத்திடணும் – நம்
மண்ணும் சிறந்து விளங்கிடணும்!
கர்ப்பம் சுமந்து இருந்திடவே – தாய்
மண்ணும் உறவில் கலந்திடனும்!

உயர்ந்து நிற்கும் மரங்களும் – நாம்
உன்னதம் என்றே மனமுருகும்
அயர்ந்து போக விடாமலே – கரு
மண்ணுக் காளுமை வளர்த்திடணும்!

# சாலையோர மரங்களே...

சாலையோர மரங்களே
நிழலுக் கேற்ற வரங்களாம்!
காலை வெயில் பட்டுமே – அது
களைப்பு நீங்கிப் போகுமாம்!

பறவை இனங்கள் தங்கவே
இலைகள் அசைத்துக் காட்டுமாம்!
கிளைகள் மீது அமர்ந்துமே – அது
கூடு கட்ட நினைக்குமாம்!

கோடை வெயில் நாளிலே
வாடைக் காற்று வீசுமாம்!
குளிர் நிழலைத் தந்துமே – அதன்
தளிர் இலைகள் சிரிக்குமாம்!

மழை நாட்கள் வந்தாலே
தழையாடை நனைக்குமாம்
வழியில் போகும் நமக்குமே – அது
குடையாய் இருந்து சிரிக்குமாம்!

## வானம்

வானம் நிறத்தைக் கொடுத்தது
கடலும் வாங்கி மகிழ்ந்தது!
நீல நிறம் முழுமையும்
அமைதி நெஞ்சில் வளர்க்குது!

கானம் பாடும் பறவைகள்!
கடலின் மேலே பறக்குது
வானம் சிரித்து மகிழ்ந்துமே
தொட்டு செல்ல அழைக்குது!

கடலின் பெருமை யாவுமே
வாழ்க்கை முழுதும் இனிக்குமே!
பயணம் சென்று பார்த்திட
கரையில் சேர்க்கும் கப்பலே!

போதிமரம் வானத்தையே
புகழ்ந்து சொல்லும் இயற்கையாம்!
அலைகள் அடித்து சிரிப்பதை
அன்னைக் கடலும் ரசிக்குதாம்!

கன்னிப் பருவ அழகு வந்து
கடலில் சிரித்து இருக்குதாம்!
பண்ணைப்புர ராகம் வந்து
பசியை மறக்கச் சொல்லுதாம்!

**மழைக்கு வாழ்த்து சொல்லியே**
**மகிழ்ந்து ஆசி கூறுவோம்**
**உழைக்கும் வான் வெளியிலே**
**உலக ஒளியைக் காணுவோம்!**

# பட்டுப்பூச்சி

பட்டுப்பூச்சி பறக்கிறது
பார்க்க ஆசை தான்
கூட்டில் ஒலி கேட்கவும்
வாழ்க்கை ஏங்கும்தான்!

மலரில் தங்கி சிரித்திட
மனது ஏங்கும் தான்
வண்ண வண்ணக் கனவுகளும்
கற்பனையில் மிதக்கும் தான்!

பச்சை மலை பாலைமணல்
சுற்றித் திரியுமே – காதல்
இச்சை கொள்ள மனதினையும்
கொள்ளை கொள்ளுமே!

மூளையிலே சிறகசைத்து
பறந்து கிடக்குது – நல்ல
கலைஞர்களின் வாழ்விலது
கனிந்து இனிக்குது!

## பால பாடம்!

அன்பைப் போதி
ஆணவம் அழி
இனியவை பேசு
ஈகை கைவிடேல்
உழைப்பைப் போற்று
ஊர்க்குளம் உண்டாக்கு
எதையும் யோசி
ஏன் எனக் கேள்
ஐயம் தெளி
ஒற்றுமை வளர்
ஓங்கு புகழ் பெறு
ஔஷதமாகு
இஃதே நீ கடைபிடி!
இனிய வாழ்வுக்கிதுவே
நெறியென நீயும் குடைபிடி!

## அதிகாலை எழுந்து படி

அதிகாலை எழுந்து தினம் – நீயும்
அவசியமாய்ப் படிக்கணும்
அப்பழுக்கு இல்லாமல் – நீயும்
மூளையில் நீ பதிய வைக்கணும்

தப்பாமல் தினந்தோறும் – நீயும்
பாடம் படித்துப் பழகணும்
முப்பாலாம் திருக்குறளை – நீயும்
முறையாக தினம் ஓதணும்

வாழ்க்கையில் வெள்ளி கண்டால் – நீயும்
உழைப்பு என்றே சொல்லணும்
பாழ்பட்டுப் போகாமல் – நீயும்
பட்டறிவை வளர்க்கணும்.

தொழிற்கல்வி படிப்பை – நீயும்
தொடர்ந்து கற்று சிறக்கணும்
தமிழ் வழியில் படித்து – நீயும்
தரணிக்கிதை உணர்த்தணும்!

## உச்சி மோந்து

அன்பு பாப்பா வந்ததும்
ஆசை அம்மா சிரிப்பாள்
இனிய பாட்டுப் பாடி
ஈரம் நெஞ்சில் வளர்ப்பாள்
உச்சி மோந்து பார்த்துமே
ஊக்கம் கொடுத்து உரைப்பாள்
என்றும் நட்பை வளர்த்து
ஏதில் குற்றம் தவிர்ப்பாள்
ஐவகை பூதம் அறிவாள்
ஒற்றுமை வாழ்வைத் தருவாள்!
ஓங்கு உண்மை உணர
ஔஷதமாக இருப்பாள்
அஃதே புகழைச் சேர்ப்பாள்.

# அன்னை அழைப்பாள்

அன்னை –
உன்னை அழைத்து
கண்ணில் மையும் இடுவாள்!
வெண்ணெய் –
படியும் முகத்தில்
பவுடர் பூசி மகிழ்வாள்!

நடைவண்டி
காட்டிச் சொல்வாள்
நடை பயிலத் தூண்டுவாள்!

கடைக்கு –
அழைத்துச் சென்றுமே
கனிவாய் இனிப்பும் வாங்குவாள்!

பொம்மை
வாங்கித் தந்துமே
நம்மைப் பார்த்து மகிழுவாள்!

பெருமையாக
வளர்த்து நம்மைப்
புகழ்ந்து பேசி ரசிப்பாள்!

**உறவு**
**சொல்லித் தருவாள்**
**உண்மை சொல்லிக் கொடுப்பாள்!**

**பறக்கும்**
**பறவைகள் போலவே**
**இரக்கம் காட்டிச் சிரிப்பாள்!**

# பம்பரம்!

சின்னச் சின்னக் கட்டையை
குடைந்து செய்யும் பம்பரம்!
வண்ண வண்ண உடையிலே
சிரித்துச் சுழலும் பம்பரம்!

தலைபெருத்து ஒரு பக்கம்
கூம்பு போல மறுபக்கம்!
ஒற்றைக் காலில் சுழன்றுமே
உறவு சொல்லி சிரிக்குமே!

கைகளுக்குள் அடக்கியே
சாட்டை அதிலும் சுற்றுவர்
தரையில் ஓங்கி விட்டதும்
சுற்றி நின்று மகிழுவர்!

கூர்மையான ஆணிதான்
கூம்பு முனையில் இருந்திடும்
நேர்மையான மனிதன்போல்
நிமிர்ந்து நடனம் புரிந்திடும்!

பூமிபோல வாழ்வுமே
பம்பரம் போல் சுழலுது!
நாமும் சுற்றி ஆடியே
நாளும் வெற்றி கொள்வோமே!

## பள்ளிக்கூடம் பறக்கிறோம்

பள்ளிக்கூடம் போகிறோம்
பாச வலையில் வாழ்கிறோம்
மல்லிப் பூக்கள் போலவே – நம்
கல்வி வாசம் தருகுதே!

ஆண்டு தோறும் தேர்வுகள்
அன்பாய் எழுதி முடிக்கிறோம்
வாண்டுகளாய் நாமுமே – கனவு
வெல்லத் துடிக்கிறோம்!.

வழியைக் காட்டும் மரமாக
கல்விக் கண்ணைத் திறக்கிறார்
ஆசான் அன்பு நமக்குமே – நாளும்
நேசம் வளர்க்க உதவுமே!

கலங்கரை விளக்கமாகவே
கரையும் சேர்த்து மகிழுவார்
கள்ளமின்றி நம்மையும் – அவர்
கருணை பொங்க வாழ்த்துவார்

கிளைகள் வேறாய் இருந்தாலும்
மரமாய் நாமும் வாழ்கின்றோம்
வெள்ளை மனதை வளர்க்கவும் – நாம்
பள்ளிக் கூடம் பறக்கிறோம்!

## தத்தை மொழி

தத்தை மொழியில் பேசிவிடு
அத்தை மடியில் உறங்கிவிடு
அன்னை அமுதம் ருசித்துவிடு
அழகுத் தமிழில் பேசிவிடு!

தவழ்ந்து நீயும் விளையாடு
தாவிக் குதித்து மகிழ்ந்தாடு
ஓடிப் பிடித்தே விளையாடு
உறவைச் சொல்லி இசைபாடு!

குறும்புச் செயலைக் குறைத்திடு
அரும்பின் குணமாய் இருந்திடு
மலர்ந்த முகமாய் இருந்திடு
மணமாய் வீசி மகிழ்ந்திடு!

இசையாய் நீயும் வாழ்ந்துவிடு
உடலின் தசையாய் மாறிவிடு
பசைபோல் உந்தன் பாசத்தை
நேச உறவில் ஒட்டிவிடு!

## உழைப்பே உயர்வு தரும்

உழைப்பை மதித்துவிடு – நீயும்
உழைப்பால் உயர்ந்துவிடு!

மலைபோல் உயர்ந்துவிடு – நீயும்
மலைத்திட வாழ்ந்துவிடு!

களைப்பு தீர உழைத்து – நீயும்
காளை ஆகிவிடு!

தலைப்பு செய்தியாகிட – நீயும்
சரித்திரம் படைத்துவிடு

மானுட தாகம் தீர்க்க – நீயும்
பொழிலாய் மாறிவிடு

கனவு கண்ட சமத்துவத்தை – நீயும்
தோளில் சுமந்துவிடு!

நனவாக்கும் நரித்தனத்தை – நீயும்
வியர்வையில் காட்டிவிடு!

கனவு காணச் சொன்னவரை – நீயும்
கருத்தாய்ப் படித்துவிடு

**அறிவியல் அறிவைப் பெருக்க – நீயும்
அப்துல் கலாமாய் ஆகிவிடு!**

**உழைப்பு எனும் தத்துவத்தை – நீயும்
தலையில் சுமந்து விடு!**

**உலகம் கைக்குள் கிட்ட – நீயும்
அரசியல் அறிந்துவிடு!**

## மஞ்சள் நிலா

மஞ்சள் நிலா வானத்திலே
தஞ்சம் கேட்டுப் போகுது!

பிஞ்சு நிலா வானத்திலே
பிறையாய் மாறி சிரிக்குது!

நட்சத்திரக் கூட்டங்களில்
வெள்ளை நிலா உலவுது!

மட்டில்லாத மகிழ்ச்சியினை
பூமிக்கது தருகுது!

தரையில் நின்றும் ஊட்டும் சோறு
நிலவைப் பார்த்துக் கேட்குது!

வீட்டுக் கூரை மீது நிற்கும்
நிலவும் வரத் தயங்குது!

சிவப்பு நிலா மாலையிலே
மேற்கில் நின்று அழைக்குது!.

சுற்றி வந்த உழைப்பிலே
சூரியனும் சிவப்பு நிலா வானது!

## மைனாவின் கனவு

ஆடும் முருங்கை கிளையிலே
அழகு மைனா அமருதே

பாடும் காற்று இசையிலே
பழக மனம் துடிக்குதே!

கூட்டில் குஞ்சு அழுததால்
உணவு தேடித் திரியுதே

கொட்டும் முருங்கைப் பூவையும்
அலகில் கொத்தி எடுக்குதே!

கண்ணாமூச்சி விளையாட்டும்
கதை கதையாய்ச் சொல்லுதே

மண்ணாசை ஒழித்து வாழ
மனிதர்களைக் கேட்குதே!

கனவு கண்ட சிரிப்பிலே
கிளையும் ஒடிந்து விழுந்ததே

மைனா பறந்து போனதிலே
முருங்கைப் பூவும் அழுததே!

# எறும்பு

சுவர் ஓரம் எறும்புகள்
சாரையாய்ச் செல்லுது
சுற்றுமுற்றும் பார்த்துமே – அது
உணவைத் தேடிப் போகுது!

இனிப்புப் பண்டம் இருப்பதை
மூக்கால் உணர்ந்து கொள்ளுது
மூடியுள்ள டப்பாவிலும் – அது
நுழைந்து உணவை உண்ணுது!

வாயிற் கோல மாவையும்
வயிறு புடைக்க உண்ணுது
சுற்றித் திரிந்த பின்னுமே – அது
புற்றுக்குள்ளே போகுது!

வீட்டைக் கழுவும் நீரிலே
குளித்து குளிர்ச்சி யாகுது
காடு நிலம் எங்குமே – அது
புற்று கட்டி வாழுது!

சுறுசுறுப்பாய் எறும்புகள்
சுற்றித் திரிந்து வாழுது
ஏற்றம் பெற வாழ்விலும் – அது
நமக்குப் பாடமாகுது!

# கண்ணாமூச்சி

சின்னப் பாப்பா நீயுமே
சிரித்து விளையாடுவாய்
குட்டித் தம்பி உன்னுடன்
கை குலுக்கி மகிழுவான்!

அன்னம் போல நடந்துமே
ஆசை தீரப் பேசுவான்
கன்னம் கொஞ்சி அவனுமே
மனதைக் கொள்ளை கொள்ளுவான்!

மணலில் வீடு கட்டுவான்
பசிக்கு சோறும் பொங்குவான்
தணலாய் கண்கள் மாறிட
அள்ளி மண்ணைத் தூவுவான்

ஆட்டம் போடும் சிறுவனும்
தெருவில் ஓடி மகிழுவான்
பாட்டுப் பாடி சிரித்துமே
அன்பை அவனும் வெல்லுவான்.

## சுற்றுலா

சுற்றுலா சென்று நாமும்
பரந்த அறிவைத் தேக்குவோம்
பற்றிலாமல் வாழ்ந்து நாமும்
விரிந்த உலகை நோக்குவோம்

மலையின் எழிலைப் பார்த்து
மனமும் மகிழ்ந்து பாடுவோம்
கலை எழிலை ரசித்து நாமும்
கவிதை எழுதிப் பழகுவோம்

கடற்கரை சென்று நாமும்
சீறும் அலையை நோக்குவோம்
குடற்பசிக்கு அழும் கொக்கையும்
கடலில் நீந்த வைப்போம்!

அழகு நதியின் தெளிந்த நீரில்
நடை பழகிச் செல்லுவோம்
பழகு தமிழ் வார்த்தையிலே
உறவைப் பெருக்கி வாழுவோம்!

# பொங்கலோ பொங்கல்

புதிய சட்டிப் பானையை
அடுப்பில் வைத்துப் பொங்குவோம் – அதில்
புதிய நெல்லைப் போட்டுமே
பாலைப் பொங்க வைப்போம்

பொங்கும் பாலின் அழகிலே
வாழ்வின் சிறப்பு தெரியுமே – அதில்
எங்கும் வயலின் தோற்றத்தை
உழவர் சிரிக்க மாற்றுவோம்

வண்டி மாடு யாவுமே
வண்ணம் தீட்டி மகிழுவோம் – அதில்
சுண்டி இழுக்கும் பலூன்களை
மாட்டுக் கொம்பில் கட்டுவோம்

சூரியனைப் பார்த்து நாமும்
ஒளியின் சிறப்பை வணங்குவோம் – அதில்
சூழ்ச்சி யாவும் வென்றிட
போகி அழுக்கைப் பொசுக்குவோம்.

இயற்கையான சூரியனும்
இருள் கிழித்து வந்திடும் – அதில்
இனிய பொங்கல் நாளாகிட
இன்பம் கூடி மகிழ்ந்திடும்

கரும்பு மஞ்சள் யாவுமே
பொங்கல் சிறப்பின் திருநாள் – அதில்
எறும்பு போல மனிதக்கூட்டம்
கூடி வாழும் பெருநாள்

# சிலேட்டை எடு

சிலேட்டை எடுத்துப்
படிக்கிற வயதில்
சித்தாளாகப் போகாதே

பைலட்டாகப் பறக்க
நீயும் கனவுகள்
காண மறக்காதே!

அழகு நிலத்தில்
அநாதையாகப்
பிச்சைஎடுத்து வாழாதே!

சிறகு விரித்துப்
பறந்து நீயும்
வானம் தொட மறக்காதே!

பேரும் புகழும்
வாங்கும் வயதில்
டீக்கடை வாழ்வைத் துவக்காதே!

கடற்கரை தோறும்
சுண்டல் விற்கும்
அலையாய் நீயும் மாறாதே!

**கனவுகள் கருக**
**கந்தகக் கிடங்கில்**
**தீக்குச்சியாகப் போகாதே**

**கனிந்து நீயும்**
**உழைப்பைத் தந்து**
**கருகி உருவம் சிதையாதே!**

# வாழைமரம்

பச்சை மலைகள் எங்குமே
பனியில் சூழ்ந்து தவிக்குது
இச்சை கொண்ட மனிதகுலம்
கீதம் இசைத்துப் பாடுது!

வாழைமரம் வளர்ந்துமே
இலைகள் குடையாய் விரிக்குது
கோழை நெஞ்சம் யாவுமே
கூட்டம் கூடித் தோற்குது!

விபத்து எதுவும் இன்றியே
எறும்பும் ஊர்ந்து போகுது
சொந்த நிலத்து மண்ணிலே
கரும்பும் விளைந்து இனிக்குது!

சுறுசுறுப்பாய் தேனீக்களும்
சுற்றுமுற்றும் பார்க்குது
கூண்டைத் தீண்டும் கொடியவரைக்
கொட்டிப் பழியும் தீர்க்குது!

## நிலவே... நிலவே...

முத்து நிலவே... முத்து நிலவே
மூழ்கிக் கடலில் இருந்தாலும்
மூச்சுத் திணறிப் போகாமல் – நீ
முழுமதி வானில் நடக்கின்றாய்!

அலைகடல் காற்றும் சூறாவளியும்
சூழ்ந்து நின்று அடித்தாலும்
அழிக்க முடியா ஒளியுடனே – நீ
உயிரில் கலந்து சிரிக்கின்றாய்!

எல்லா உயிரின் கண்களிலே
உயிரின் தீபம் எரிகிறதே
நிலவைக் காண கைகளிலே – நீ
கண்ணாமூச்சு ஆகின்றாய்!

பழகும் கிளியின் மொழியிலும்
பற்றை உணர்ந்து சிரிக்கின்றாய்
கரியும் புகையும் ஒழித்துமே – நீ
மனதில் தெளிவை வளர்க்கின்றாய்!

உண்மை நிலவை வணங்கியே
இன்பம் பொங்க வாழுவோம்
இனிய உலகம் கண்டு – நாமும்
அன்புப் பயிரை வளர்த்திடுவோம்!

## சிங்காரப் பயலே..

சித்திரை மாதம் பிறந்தாச்சு
சிங்காரப் பயலே – நீ
சிரித்து மகிழும் பருவம் தானே
செல்லம்மா பயலே!

குட்டை குளங்களும் சிரிக்கிறதே
சிங்காரப் பயலே – நீ
தூண்டில் போட்டு காத்திருப்பாய்
செல்லம்மா பயலே!

தோப்பு தேடி விளையாடுவாயே
சிங்காரப் பயலே – நீ
சுறுசுறுப்பாகி வென்று வருவாய்
செல்லம்மா பயலே!

தாத்தா பாட்டி பார்க்கப் போவாய்
சிங்காரப் பயலே – நீ
சொந்த மண்ணில் (சு)வாசம் பார்ப்பாய்
செல்லம்மா பயலே!

படித்த களைப்பு தீரவேணும்
சிங்காரப் பயலே – உனக்கு
சித்திரை மாதம் விடுமுறை தானே
செல்லம்மா பயலே!

## தெரு விளக்கு

குடியிருக்கும் தெருவிலே – கம்பம்
குழியும் தோண்டி நாட்டுவார்
மடியில் கம்பி பூட்டியே – அதில்
விளக்கையுமே ஏற்றுவார்!

இருட்டில் நடக்கும் யாவருக்கும்
இனிய ஒளியைக் காட்டுவார்!
காரிருளை விலக்கி வைத்து
பாரில் பயத்தைப் போக்குவார்!

சாலை ஊர் நாடு வரை
இருளைப் போக்கி வெல்லுவார்
தெருவிளக்குக் கம்பத்தில்
வாழ்வின் அழகைக் கூட்டுவார்!

ஒளிவு மறைவு இன்றியே
வாழும் துறை மின்துறை
மலிவாய் அதைப் பார்க்காமல்
வலிவாய் நாமும் மாற்றுவோம்.

## வேப்பமரக் கூட்டிலே...

வேப்ப மரக் கூட்டிலே
காகம் முட்டை இட்டது
பொந்துக்குள்ளே பாம்புமே
பார்த்து நின்று சிரித்தது!

தினமும் காக்கை வந்துமே
எண்ணி எண்ணிப் பார்த்தது
உணவைக் கொண்டு வந்துமே
கூட்டில் அதுவும் சேர்த்தது!

எட்டிப் எட்டிப் பார்த்துமே
காகம் இருப்பை உணர்ந்தது
பாம்பு எண்ணம் கருகிட
காலம் கழிந்து போனது!

கிளையில் பருந்து இருப்பதை
பாம்பும் பார்க்க மறந்தது
கூட்டிலிருந்த முட்டைகளும்
பாம்பைப் பார்த்து அழுதது!

பருந்துப் பார்வை பட்டதும்
முட்டை சிரித்து இருந்தது
நம்மைக் காக்க பருந்துமே
வந்ததென நம்பின.

கூட்டை நெருங்கிப் பாம்புமே
வந்த போது நடந்தது
பறந்து வந்த பருந்துமே
கொத்தி எடுத்துச் சென்றது!

கூடியிருந்த முட்டைகளும்
குஞ்சு பொரித்து மகிழ்ந்தது
பாம்பு பயம் இன்றியே
தாயைக் கட்டி அணைத்தது!

சுற்றித் திரிந்த காகமும்
குட்டிகளைப் பார்த்தது
கருவில் நடந்த கதைகளை
முட்டை ஓடும் சொன்னது!

காகம் வியந்து கேட்டுமே
பருந்தைத் தேடிச் சென்றது
செல்லும் இடம் எங்குமே
பருந்தின் நேசம் சொன்னது!

# காகம்

தோட்டத்திலே காகமும்
கூடு கட்டிப் பார்த்தது
சாட்டை போல அதுவுமே
கண்கள் சுற்றிப் பார்த்தது!

மரத் தருகே சென்றதும்
இனத்தைக் கூவி அழைத்தது
சரவெடியாய் அவைகளுமே
கிளையில் வந்து அமர்ந்தது!

சுதந்திரமாய் வாழ்கிறதே
காக்கை குருவி இனங்களும்
பறந்து சென்று நம்மையும்
அடிமை என்று சொன்னது.!

## சாதனைகள் புரியணும்

கள்ளமின்றிப் பழகணும் — நீ
கன்னல் தமிழைப் பேசணும்
கட்டுப்பாடு காத்துமே — நீ
கண்ணியத்தைப் போற்றணும்!

பாடம் சொல்லக் கேட்கணும் — நீ
பாட்டுப் பாடி மகிழணும்
நடத்தும் பாடம் யாவையுமே — நீ
நித்தம் வீட்டில் படிக்கணும்!

கச்சிதமாய் கணக்குப் போட — நீ
வீட்டுக் கணக்கும் பார்க்கணும்
பக்குவமாய் அறிவியலும் — நீ
படித்தும் செய்தும் பார்க்கணும்!

வரலாறும் படிக்கணும் — நீ
வாழ்வில் அரசியல் தேடணும்
வரலாற்றில் நீயும் இருக்க — நீ
சாதனைகள் புரியணும்!

# வானம் திரை.. !

கூட்டவெளி தன்னிலே
பாட்டுப் பாடி வந்திடு! – நீ
வேட்கையோடு இருந்துமே
பூங்குயிலாய்ப் பாடிடு!

கனவு கண்ட காட்சியை
நனவுத் தேரில் ஏற்றிடு – நீ
மனதில் காட்சியாக்கியே
மாட்டி வடத்தை இழுத்திடு!

இசைக்குயிலாய்ப் பறந்திடு
இனிய உலகைக் காட்டிடு – நீ
விசை மிகுந்த பந்துபோல்
உலகில் என்றும் உலவிடு!

வண்டு போல பாடியே
வானத்திலே பறந்திடு! – நீ
கண்டு கொண்ட காட்சியை
கார் முகிலில் வரைந்திடு!

அஞ்ஞானத்தை அகற்றியே
விஞ்ஞானத்தை வளர்த்திடு! – நீ
தன்மானத்தைக் காத்துமே
தலைநிமிர்ந்து வாழ்ந்திடு!

# மொட்டுப் பூவே..

சிற்றிதழே... சிற்றிதழே
சிறப்பை சொல்லடா – நீ
சீறி விழும் கோபத்திலே
வாழ்க்கைப் பாழடா!

கோவில் மணியே... கோவில் மணியே
ஊமை தானடா – நீ
தொட்டு அடிக்கும் ஓசையிலே
துள்ளும் மனசடா!

பம்பரமே... பம்பரமே
சுற்றிக் கொண்டிரு – நீ
சோர்ந்து போக இடந்தராமல்
சாட்டை யோடிரு!.

மொட்டு மலரே... மொட்டு மலரே
முரசு கொட்டடா – நீ
முட்டி மோதி வாழ்க்கையிலும்
வெற்றி கொள்ளடா!

துளிப்பாவே... துளிப்பாவே
தூரம் தானடா – நீ
களிப்போடு வாழக் காலம்
கனிந்து வருதடா!

# மின்மினி

சிட்டு சிட்டுக் குருவியும்
சின்ன சின்னப் பறவையும்
வானில் பறந்து போகுது
வசந்தம் காண அழைக்குது!

குட்டி குட்டி முட்டைகள்
காட்டில் இட்டு வைத்தது
குஞ்சு பொரித்துப் பார்க்கவே
காவல் காத்து இருந்தது!

விளக்கு எதுவும் இன்றியே
இருட்டு வாழ்க்கை யானது
குஞ்சு பொரித்த இரவிலே
குளிரால் நடுங்கி இருந்தது!

மின்மினிகள் கூட்டமாய்
காட்டுக்குள்ளே நுழைந்தது
ஒளியின் வெள்ளம் பாய்ந்ததில்
நடுக்கம் குறைந்து போனது!

ஒளியைக் கண்டு குஞ்சுகள்
கண்கள் கூசிப் பார்த்தது.
கூட்டில் சூடும் வந்திட
குளிரும் நின்று போனது!.

# தீபாவளி..

ஆதி மாமா வாங்கி வந்த
தீபாவளிப் பட்டாசை – நீ
ஆசை தீர வெடிக்கலாம்
அன்பைச் சொல்லி வணங்கலாம்!

வட்டமான சக்கரம்
வீடு எங்கும் சுற்றிடும்
தரையில் ஒளி வட்டமாய்
பூத்துப் பூத்து சிரித்திடும்!

கம்பி கொளுத்தி தம்பியும்
கையில் சுற்றி மகிழுவான்
சிதறுகின்ற பூக்களில் – நாம்
சிரிப்பினையும் காணலாம்.

வீடு முழுதும் மருந்துகள்
வித விதமாய் மணக்குமே
கழுவி விட்ட பிறகுமே – இது
மனதில் வாசம் வீசுமே!

# தீபாவளித் திருநாளில்

மத்தாப்பூ கொளுத்திப் பாரு
மனம் சிரிக்கும் அழகைப் பாரு
வண்ண ஒளியில் வாழ்க்கையும் தான்
வான வில்லாய்த் தெரியும் பாரு!

ரோல் கேப்பு வாங்கி நீயும்
துப்பாக்கியில் வெடித்துப் பாரு
வேல் எடுத்து வீசியும்
சூரர்களை அழித்துப் பாரு!

குருவி முதல் யானைவரை
பட்டாசுகளை கொளுத்திப் பாரு
சினந்து வெடிக்கும் சத்தத்திலே
டி.வி. சீரியலைப் மறக்கப்பாரு!

பூண்டு போன்ற பட்டாசையும்
ஓங்கி அடித்துப் பழகப்பாரு
வெங்காயமாய் தோலுரித்தும்
பச்சோந்திகளை வீழ்த்தப்பாரு!

## அன்னை நிலம்

அன்பு நிலமே
அன்னை மனம்!
ஆசை கொஞ்சும்
தங்கக் குளம்!

கனிவு தரும்
இனிய மரம்!
கன்னல் வயல்
தோப்பாகும்!

கட்டுத் தறிபோல்
நமை நெய்வாள்!
வானம் காட்டிச்
சோறூட்டுவாள்!

கள்ளம் தவிர்த்தே
சிரித்திடுவாள்!
உள்ளக் கோயிலில்
குடியிருப்பாள்!

அவளுக்கிணையாய்
உலகினிலே
எந்த உயிரும் தோன்றவில்லை

**அவணியில் அவளே**
**முதற் பொருளாம் – நம்**
**அனைவருக்கும் உயிர்தரும்**
**கருப்பொருளாம்!**

**அவளே உண்மை உணரும்**
**உயர்வுக்கான உரிப்பொருளாம் !**
**அன்னை முதல் கரு உரியென**
**மூன்றைச் சொல்லும் முத்தமிழாம்.**

## அகர முதல...

அன்புப் பயிர் வளர்க்கிறது
ஆசை கொள்ள வைக்கிறது
இனிய உறவைக் கண்டதும்
ஈ.யீ என மனதும் மகிழ்கிறது
உயிர் வளர்வதைச் சொல்கிறது
ஊஞ்சல் கட்டி அழைக்கிறது
என்றும் குளிர்ச்சி தருகிறது
ஏங்கிய மனதும் இனிக்கிறது
ஐயமின்றி அழைக்கிறது
ஒருமையில் வரைந்த ஓவியத்தை
ஓங்கிச் சொல்வோம் உயிரோடு
ஔஷதமாகும் உடலுக்கும்
இஃதே பைந்தமிழ் தோட்டமாம்!

*தங்கள் கருத்திற்காக . . .*

இன்றைய சமூகச் சிந்தனையுள்ள முற்போக்குக் கொள்கைகளை ஏந்திய படைப்பாளர்கள் குழந்தை இலக்கியப் படைப்புகளைப் படைக்கும் போக்கிலும் தங்களை முன்னிறுத்திக் கொள்ளவேண்டும் என்பதை நன்கு உணர்ந்தவராகக் கவிஞர் ஆரிசன் பயணித்துள்ளார் என்பதற்கு இக்குழந்தைப் பாடல்கள் நல்ல சான்றாக விளங்குகின்றன.

**– கலைமாமணி கவிஞர் பொன்னடியார்**

உயிர் முழுக்க மழலை மொழி, மழலைத் தனமானதாக மாறிய மனநிலை. ஆழப்புதைந்த அறிவு மூன்றும் இணைகிற படைப்பாளிதாம் அரும்புகளுக்கு இலக்கியம் படைக்க முடியும். அரும்புகளுக்கான பாடல்கள் எழுதுவதன் மூலம் வெற்றி பெற்றிருக்கிறார் ஆரிசன்.

**– மேலாண்மை பொன்னுச்சாமி’**

இன்று – ஏடு தூக்கும் பாலகர், நாளை – நாடு காக்கும் காவலர்’ என்கிற எதிர்பார்ப்பில், அவர்களது மனங்களைப் பண்படுத்தவும், பக்குவப் படுத்தவும் பயன்படுவது பாட்டு. குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா தொடங்கி, தொடரும் நீண்ட வரிசையில் கவிஞர் ஆரிசன் இணைகிறார்; வரவேற்போம்; வாழ்த்துவோம்.

**– கவிஞர் மலர்மகன்.**

பந்தும், தேனீக்களும், காக்கைகளும், குண்டுமல்லியும், வானமும், எறும்பும், நிலவும் இந்நூலில் பாடுபொருள்களாகியிருக்கின்றன. உண்மையில் ஆரிசன் எடுத்துக் கொண்டிருக்கும் பாடுபொருள்கள்தான். குழந்தைகள் உலகத்தின் நாயகனும் நாயகியுமாய் இருக்கிறார்கள் என்று உறுதி செய்கிறார்கள் உளவியல் அறிஞர்கள்!.

**– கவிஞர் தமிழ் இயலன்.**

**ஆசா பதிப்பகம்**
கீழ்க்கொடுங்காலூர்
வந்தவாசி - 604 403
கைப்பேசி : 94423 11118

